**பத்தாம் வகுப்பு – தமிழ்**
**முதல் தாள்**
**(செய்யுள், உரைநடை)**

**காலம் : 02.30 மணி** **மதிப்பெண் : 100**

**குறிப்பு: விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவிலும் அமைதல் வேண்டும்.**

## பகுதி – அ

**அ) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.** **20 ×1 = 20**

1. செல்வத்தை நிலையாகக் கட்டும் கயிறாக வள்ளுவரால் குறிப்பிடப்படுவது
அ) ஒழுக்கம் ஆ) காலமறிதல் இ) அடக்கமுடைமை ஈ) பெரியாரைத் துணைக்கோடல்
2. கண்ணகியின் காற்சிலம்பில் உள்ள பரல்கள்
அ) முத்து ஆ) பவளம் இ) மாணிக்கம் ஈ) மரகதம்
3. கூவா முன்னம் இளையோன் குறுகிநீ
ஆவான் யாா்என அன்பின் இறைஞ்சினான்– இப்பாடல் அடிகளில் அமைந்துள்ள நயம்
அ) எதுகை ஆ) இயைபு இ) முரண் ஈ) அணி

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

4. தம்மை அடைக்கலமாகக் கொண்டவரின் துயரை நீக்குவதே ------------------ என நற்றிணை குறிப்பிடுகிறது.
5. பெரியபுராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் -------------------------
6. பாடற் கலிங்கமழித் தாயிர மானை கொன்ற
பாடற் கரிய பரணியும் – இப்பாடலடிகளில் குறிப்பிடப்படும் பரணி நூல் ------------------

**இ) பொருத்துக**

7. தேவாரம் – நல்லந்துவனாா்
8. சீறாப்புராணம் – சாலை.இளந்திரையன்
9. கலித்தொகை – திருநாவுக்கரசா்
10. பூத்தது மானுடம் – உமறுப்புலவா்

**ஈ) சரியா, தவறா – எனக் குறிப்பிடுக.**

11. இலக்கணம் வகுத்த பின்பே இலக்கியங்கள் தோன்றின.
12. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கட்டாயக் கல்வியை வலியுறுத்துவது 48ஆவது விதியாகும்.

**உ) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

13. பண்ணொடு தமிழொப்பாய் – எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல்
அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) தேவாரம் ஈ) நாலடியாா்
14. கீழ்க்காண்பனவற்றுள் காந்தியடிகளின் மனங்கவா்ந்த குஜராத்திப் பாடலின் கருத்து
அ) இன்னா செய்யாமை ஆ) இன்சொல் கூறுதல் இ) எளிமை ஈ) சிக்கனம்

**ஊ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

15. அயோத்திதாசா் தொடங்கிய இதழின் பெயர் -------------------
16. மாறுபாடு இல்லாத உண்டி – என வள்ளுவா் குறிப்பிடுவதை இன்றைய மருத்துவா்கள் ---------- ------ எனக் குறிப்பிடுகிறாா்கள்.

**எ) பொருத்துக.**

17. உடம்பை வளா்த்தேன் உயிா் வளா்த்தேனே – கவிமணி
18. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் – பாரதிதாசன்
19. திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் – மாணிக்கவாசகா்
20. புல்லாகிப் பூடாய் – திருமூலா்

## பகுதி – ஆ

**அ) கீழுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.**

**5 ×2 = 10**

21. இறைப்பற்று உடையவர்களின் செயல் எவ்வாறு இருக்க வேண்டுமென மாணிக்கவாசகர் கூறுகிறார் ?
22. குகன், இராமன்மீது கொண்ட அன்பை வெளிப்படுத்திய செயல்களுள் இரண்டனைக் குறிப்பிடுக.
23. ‘தண்ணீர்ப்பந் தரில் நும்பேர் எழுதாதே
    வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்’ – யார் , யாரிடம் வினவினார் ?
24. கலம்பகம் குறிப்பு எழுதுக.
25. ஆந்தை, காகம் ஆகியனவற்றின் இயல்புகளைக் குறிப்பிட்டு அறிவுரை தரும் திருக்குறளை எழுதுக.
26. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?
27. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது ?

**ஆ) கீழுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை தருக. 5 ×2 = 10**

28. பண்பட்ட உயர்ந்த சிந்தனை தமிழ்மொழியில் அமைந்திருப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டினைத் தருக.
29. விளக்கப்படம் – குறிப்பு எழுதுக.
30. தமிழகம் தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது என்பதற்கு ஒரு சான்று தருக.
31. உலகம் என்னும் சொல்லின் பெயர்க்காரணம் கூறுக.
32. பகட்டான வாழ்வை விரும்பாதவர் காந்தியடிகள் – இக்கூற்றை விளக்க நும்பாடப்பகுதியில் அமைந்துள்ள நிகழ்வைக் குறிப்பிடுக.
33. தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை என அயோத்திதாசர் அழைக்கப்படக் காரணம் என்ன ?
34. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் – இப்பாடலடி உணர்த்தும் உண்மை யாது ?

**இ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறுவரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3 × 4 = 12**

35. அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றாகும் – இக்கருத்தைச் சிலப்பதிகாரத்தில் எவ்வாறு வெளிப்படுத்துகிறது ?
36. நட்பிற்கு எடுத்துக்காட்டாகச் சோழ மன்னனும் பிசிராந்தையாரும் எங்ஙனம் விளங்கினர் ?
37. நந்திவர்மனின் வீரத்தை வெளிப்படுத்தும் இருசெயல்களைக் குறிப்பிடுக.
38. ‘அரியா சனமுனக்கே யானா லுனக்குச்
    சரியா ருமுண்டோ தமிழே – இப்பாடல்வழி நீ அறியும் தமிழின் சிறப்பு யாது ?
39. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது ?

**ஈ) 40. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5**

தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ?
2. முத்தமிழ் – விரித்தெழுதுக.
3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.
4. உன்னோடுவந்துரைக்கும் – பிரித்தெழுதுக.
5. விளம்பக்கேள் – பொருள் கூறுக.

**அல்லது**

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே. – இப்பாடலின் மையக்கருத்தை எழுதுக.

**உ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.** **3×4 = 12**

41. கைம்பெண் மணத்தை ஆதரித்தவர் பெரியார் – இக்கூற்றைச் சான்றுகாட்டி நிறுவுக.
42. மேடைப்பேச்சின் திறம் குறித்துக் குறள் கூறும் செய்திகள் யாவை ?
43. தொழில் நுட்பக் கல்வி குறித்து எழுதுக.
44. தமிழர் இசைக்கலையில் மேம்பட்டிருந்தனர் என்பதற்கு ஒரு சான்று தந்து விளக்குக
45. காந்தியடிகள் தம் வாழ்வில் வாய்மையைக் கடைப்பிடிக்க அடிப்படையாக அமைந்த நிகழ்ச்சியை விளக்குக.

## பகுதி – இ

**அ) 46. கீழ்க்காணும் பகுதியைப் படித்துக் குறிப்புகள் எழுதுக.** **5**

உலகில் பல மொழிகள் தோன்றி மறைந்தன. தமிழ் மட்டும் கால வெள்ளத்தால் அழியாமல் நிலைத்து நிற்கிறது. சில மொழிகள் பேசுவோரின்றி இலக்கிய இலக்கணங்கள் மட்டுமுள்ளன. தமிழ்மொழி இன்றும் பழைமைக்கும் பழைமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய்க் கருத்துச் செல்வம் நிறைந்ததாய் இளமைப்பொலிவுடன் விளங்குகிறது. ஆதலின், தமிழ் பெருமை மிக்க பழைய வரலாறு உடையது. தமிழ்மொழி பேசுநர், கி.மு.2000க்கு முன்பிருந்தே தமிழகத்திலும் தென்னாட்டிலும் இடைவிடாது வாழ்ந்து வந்த மண்ணின் மைந்தரே என்பதைத் தொல்லியல் ஆய்வுகளும் காட்டுகின்றன என்பதை ஆல்சின் தம்பதியர் (1988) தம் நூலில் குறித்துள்ளனர்.

தமிழிலுள்ள இலக்கண இலக்கியப் பாகுபாடுகள் யாவும் மிகச்சிறப்பு உடையன. இலக்கியத்தை அகம், புறம் என இரு பிரிவுகளாகப் பிரித்ததோடு, அகத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்றும், புறத்தை வெட்சி, கரந்தை, நொச்சி, உழிஞை, காஞ்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல் என்றும் பாகுபடுத்திய நுட்பமே தமிழரின் அறிவையும் பண்பாட்டையும் காட்டுகின்றன. தமிழ் இலக்கணத்தின் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகைப்பாகுபாடுகளும் மிகத் தொன்மையானவை. இப்பாகுபாடுகள் எல்லாம் தமிழின் தொன்மையைக் காட்டுகின்றன.

**அல்லது**

**கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

வினையே ஆடவர்க்குயிர் என்கிறது குறுந்தொகை. முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை என்கிறது தொல்காப்பியம். சங்க காலத்தில் பொருளீட்டுவோர் ஆண்களே எனவும், பெண்கள் குடும்பத்தைப் பொறுப்புடன் நடத்தவேண்டும் எனவும், பெண்கள் கடல்கடந்து செல்லக்கூடா தெனவும் கூறி வந்தனர். இன்று, இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இன்றைய சூழலில், இருவரும் வருவாய் ஈட்டினால்தான் குடும்பத்தைச் சிறப்பாக நடத்த இயலும்.

பள்ளிக்கல்வியை முடித்த ஒருவர், அதற்குமேல் என்னென்ன படிப்புகளை மேற்கொண்டு வேலைவாய்ப்பினைப் பெறலாம் என்பது குறித்த விழிப்புணர்வை ஒவ்வொருவரும் பெற வேண்டும். தற்போது மேனிலைக்கல்வியில் தேர்ச்சி என்பதுதான் பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படை என்னும் நிலை உருவாகியுள்ளது.

1. ஆடவர்க்குயிராகக் குறுந்தொகை எதைக் குறிப்பிடுகிறது ?
2. முந்நீர் – விரித்தெழுதுக.
3. மகடூஉ – இச்சொல்லின் பொருள் யாது ?
4. தற்போது பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படையாக அமையும் கல்வி எது ?
5. இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

**ஆ) கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்துவரிகளுக்கு மிகாமல் விடையளிக்க .** **8**

47. சிலப்பதிகார வழக்குரை காதையில், பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவியின் இறப்பு இளங்கோவடிகளால் எவ்வாறு நியாயப்படுத்தப்படுகிறது ?

**அல்லது**

பெரியாரைத் துணைக்கோடலினால் விளையும் நன்மைகள் குறித்து வள்ளுவர் கூறுவன யாவை ?

**இ) கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்துவரிகளுக்கு மிகாமல் விடையளிக்க . 8**

48. தமிழ்மொழி உயர்தனிச்செம்மொழி என்ற கூற்றை மெய்ப்பிக்க ஐந்து சான்றுகள் தருக.

**அல்லது**

மேனிலைக்கல்வி, பல்துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெற அடிப்படையாக அமைவதை உரிய எடுத்துக்காட்டுகள் தந்து நிறுவுக.

**ஈ) செய்யுள் வடிவில் விடைதருக. 2 + 2 + 6 = 10**

49. அ) செய்க பொருளை............ எனத் தொடங்கும் குறள்.

ஆ) செயல் என முடியும் குறள்.

50. தேராமன்னா..... எனத்தொடங்கி .......புகாரென் பதியே – என முடியும் சிலப்பதிகாரப் பாடலடிகள்.

***************